விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 019 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 23 செவ்வாய்க்கிழமை (07.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சட்டத்தை நிலைநாட்டி
# மக்களின் நம்பிக்கையை மீளப் பெற நடவடிக்கை



## ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(கொழும்பு)

சட்டத்தை நிலைநாட்டி வீழ்ச்சியடைந்துள்ள பொதுமக்களின் நம்பிக்கையை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும்



03

## வடமராட்சியில் நீண்ட நாட்கள் தேடப்பட்ட நபர் கைது

(குடத்தனை)

வடமராட்சியில் நீண்ட நாட்களாகத் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் 15

## சீனாவில் பரவும் வைரஸ்
# இந்தியாவில் இதுவரை 5 குழந்தைகளுக்கு உறுதி

(கொழும்பு)

சீனாவில் எம்.எம்.பி.வி எனப்படும் ஒரு வித வைரஸ் பரவி வருகின்றது.

இந்தியாவில் இந்த வைரஸ் அறிகுறிகளுடன் இதுவரை 5 குழந்தைகள் இனம் காணப்பட்டுள்ளன.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டிறுதியில் உரு 15

## ரணில் - சஜித் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது 15



## எலிக் காய்ச்சலால் கிளிநொச்சியில் இருவர் மரணம்

(கிளிநொச்சி)

எலிக்காய்ச்சல் காரணமாக கிளிநொச்சியில் இருவர் உயிரிழந்துள்ளனர் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தைத் தெரிவித்த அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சியின் முழங்காவில் மற்றும் கண்டாவளைப் பகுதிகளில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

எலிக்காய்ச்சல் 15

## யாழில் மீண்டும் சோதனைச் சாவடிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

போரின் போதும் போர் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

இந் நிலையில் 15



## நிறுத்தப்பட்ட வீட்டுத்திட்ட நிர்மாணங்கள் ஆரம்பம்
### நகர அபிவிருத்தி அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதன் முக்கிய நோக்கம் ஒவ்வொரு தனிநபருக்கும் வீட்டுரிமையை வழங்குவதாகும் என சுட்டிக் காட்டப்பட் 15

## கட்டி வைத்து தாக்குதல் உரும்பிராயில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் ஒருவரைக் கட்டி வைத்துத் தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். 02

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்
### யாழ்.பல்கலை முன் கையெழுத்துப் போராட்டம்



02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டுமுதல் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் விசாரணை

## பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க

(கொழும்பு)

2015ஆம் ஆண்டுமுதல் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்ட காணி தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் காணி மற்றும் நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

விசாரணையின் பின்னர் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்ஆர்சி மூலம் தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத்திற்காக நிலங்கள் விடுவிக்கப்படுகின்றன.

ஆனால் சமீப காலமாக பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் யாருக்குக் காணி வழங்கப்பட்டுள்ளது? என்ன திட்டங்களுக்கு? எந்த அடிப்படையில்? என்பது தொடர்பில் விசாரணை முடியும் வரை LRC மூலம் காணி வழங்கப்படுவது நிறுத்தப்படும்.

கூடிய விரைவில் இந்த விசாரணையை நடத்தி இந்தக் காணிகள் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது, இதில் ஊழல் நடந்துள்ளதா? என்பதைக் கண்டுபிடிப்போம் என்று நம்புகிறோம் என்றார். (ம-7)

# இலங்கையின் விளையாட்டு வளர்ச்சிக்கு இந்தியா ஆதரவு

## விளையாட்டு அமைச்சகம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் விளையாட்டு வளர்ச்சிக்கான நிபந்தனையற்ற ஆதரவை இந்தியா வழங்குவதாக இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே இடையில் நடந்த சந்திப்பில் இந்த உறுதியளிப்பு வழங்கப்பட்டது.

மேலும் இந்திய உயர்ஸ்தானிகர், கிரிக்கெட் உட்பட பல விளையாட்டுகளுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று கூறினார். மேலும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான இலக்கையும் அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் இளைஞர் விவகாரத்துறை மற்றும் விளையாட்டுத்துறை பிரதியமைச்சர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

# பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் பிரதமர் ஹரிணி சந்திப்பு

(கொழும்பு)

அரச பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல்கலைக் கழகங்களில் நிர்வாகச் சிக்கல்கள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்கள், மாணவர்களின் குடியிருப்புப் பிரச்சினைகள், உதவித்தொகை செலுத்தும் செயல்முறையை முறைப்படுத்துதல் போன்ற பல பிரச்சினைகள் குறித்து இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதிக் கல்வி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர். (ம-7)

# கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின்

## பரிசில் தின நிகழ்வு

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்யாலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பரிசில் தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது

வித்தியாலய முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவன் அவர்கள் கலந்து கொள்ளும் அதே வேளை சிறப்பு விருந்தினர்களாக மாவட்டக் கடற்தொழில் அலுவலர் நடேசன் மகேஸ்வரன் அவர்களும் அவர்தம் பாரியார் சிவஸ்ரீ மகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

### தமிழ் அரசி ...

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி யாழ். பல்கலைக்கழக முன்றலில் நேற்றுக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்குக் கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நேற்று யாழ். பல்கலைக்கழக முன்றலில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கு.துவாரகன் மற்றும் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன் ஆகியோரால் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப் பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒப்பமிட்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர்.

தொடர்ந்து, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் "வெஞ்சிறையின் குரல்" எனும் பாடல் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் குறித்த போராட்டத்தின் நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அக்கினிச் சிறகுகள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட இப்பாடலானது மாணிக்கம் ஜெகன் அவர்களின் பாடல் வரிகளில், சங்கீர்த்தனனின் குரலில், சிவ.பத்மஜனால் இசையமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

### கட்டி வைத்து...

தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளியான காணொளியை அடிப்படையாகக் கொண்டு கோப்பாய் பொலிஸாரினால் மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இரண்டு பேரும் என ஐவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கடந்த வாரம் உரும்பிராய் பகுதியில் உள்ள வெதுப்பகமொன்றுக்கு வந்த ஒருவர் அப்பகுதியில் நிலத்தில் விழுந்து கிடந்த தங்க ஆபரணத்தை எடுத்து வெதுப்பகத்தில் வழங்கியுள்ளார்.

சில தினங்களுக்கு பின்னர் அடிக்கடி நகை உரியவர்களிடம் வழங்கப்பட்டதா என வெதுப்பகத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்நிலையில் வெதுப்பகத்தில் இருந்த இளைஞர் குழு குறித்த நபரை கட்டிவைத்து தாக்கி காணொளியை வெளியிட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள கோப்பாய்ப் பொலிஸார் கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)






## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 20.12.2023 இல் இறைபதமெய்திய
எமது குடும்பத் தலைவி

அமரர் **கந்தசாமி பரமேஸ்வரி**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று 07.01.2025 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தம்புவத்தை,
ஏழாலை மேற்கு, ஏழாலை.
தொ.பே - 077 435 0912

(C-1967)

இங்ஙனம்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி
# யாழில் கையெழுத்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணம் மடத்தடி பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.**





வடமாகாணத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஆறு நாட்களாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

7ஆவது நாளாக நேற்று யாழ் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கையெழுத்துப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அகில இலங்கை இந்து மகா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பீடாதிபதி எஸ். ரகுராம், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன் ஐங்கரநேசன், யாழ் மாநகர சபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-33)

## "உதயநாளும்" பரிசுத் தினமும்

(யாழ்ப்பாணம்)

வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் உதயநாளும் பரிசுத் தினமும் நிகழ்வானது எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகம் செல்லா மண்டபத்தில் வாழ்வக தலைவர் ஆறுமுகம் ரவீந்திரனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டிசில்வா, சிறப்பு அதிதிகளாக பனிக்குளம் நலனோம்பு மைய இயக்குனர் அருட்பணி செபமாலை அன்புராசா (அ.ம.தி), சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன், இணுவில் கிழக்கு கிராம சேவை உத்தியோகத்தர் மகாராஜா கபிலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதுடன் விசேட அதிதியாக கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மாணவன் செல்வன். பிரியன் கிங்ஸ்ரனும் கௌரவ அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி)

## புதிய அரசமைப்பு உருவாக்கம்; தாமதமின்றி ஆரம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தாமதமின்றி ஈடுபட வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் புதிய அரசமைப்பினை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் எனவும் அரசாங்கம் தனது பதவிக்காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதிய அரசமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ணவுடனான சந்திப்பின் பின்னர் கர்தினால் இதனை தெரிவித்துள்ளார். (நி)

## 'சிகிரியா நிலவில்' வேலைத்திட்டம் அமுல்

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க சிகிரியா கோட்டையை நிலவு இரவுகளில் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறப்பதற்கு சுற்றுலா அமைச்சு தீர்மானித்துள்ளது.

பௌர்ணமி தினத்தை இலக்காகக் கொண்டு மாதத்திற்கு ஐந்து நாட்களுக்கு 'சிகிரியா நிலவில்' என்ற வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, பௌர்ணமி தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் பௌர்ணமி தினத்திற்கு பின்னரான இரண்டு நாட்களிலும் பௌர்ணமி தினத்தன்றும் சுற்றுலாப் பயணிகள் சிகிரியாவை பார்வையிடலாம்.

சுற்றுலாத்துறையின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும்



(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (ஜே.பி) அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8.30 மணிக்கு மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து சிறப்பு ஊர்வலம் இடம்பெற்று தொடர்ந்து 9 மணிக்கு அம்மையாரின் நினைவாலய வழிபாடு, 9.10 மணிக்கு உருவச் சிலைக்கான கௌரவம், 9.30 மணிக்கு மண்டப நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். திருமுறை வழிபாடும் இடம்பெற்றதையடுத்து தொடர்ந்து வரவேற்புரையினை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபை உபதலைவர் சி.அருளானந்தசிவம் வழங்குவதுடன் திருமுறை அர்ச்சனையினைத் துர்க்காபுரம் மகளிர் இல்ல பழைய மாணவிகள் வழங்கவுள்ளனர்.

ஆசியுரைகளை மாவை ஆதீன முதல்வர் மகாராஜ ஸ்ரீ.ச.இரத்தினசபாபதிக் குருக்கள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சு.செந்தில்ராஜக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி.சிவகங்கா சுதீஸ்னர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு மலர் வெளியீட்டின் முதற்பிரதியை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சித்தார்த்தன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

அதனையடுத்து சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதிய சபை வழங்கும் கல்வி நிதியத்தினை தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரி, மருத்துவ நிதியத்தினை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர், புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இறுதியாக நன்றியுரையினை துர்க்காதேவி தேவஸ்தான உப செயலாளர் இ.இராதாகிருஷ்ணன் நிகழ்த்தவுள்ளார். (6-8)

## இலங்கை வந்த சீன அமைச்சர்

(கொழும்பு)

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நமீபியாவுக்குச் செல்லும் வழியில் இலங்கையில் ஒரு குறுகிய பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை நேரப்படி 2.18 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அவர் வந்தடைந்ததாக விமான நிலையத் தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதன்போது,18 உறுப்பினர்களைக் கொண்ட சீனக்குழுவை இலங்கைக்கான சீனத்தூதர் குய் ஜென்ஹொங், ஓய்வுபெற்ற விமானத் தலைவர் மார்சல் ஹர்சா அபேவிக்ரம ஆகியோர் வரவேற்றுள்ளனர்.

இந்த நிலையில், சீன வெளியுறவு அமைச்சரும் அவரது குழுவும் இலங்கை நேரப்படி 04.23 மணிக்கு இலங்கையிலிருந்து புறப்பட்டுள்ளனர்.



இதேவேளை, ஜனவரி 5 முதல் 11 வரை நமீபியா, கொங்கோ குடியரசு, சாட் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு வாங் யி விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள்- 2025



சூரியனை இராசிநாதனாகக் கொண்ட சிம்ம இராசி அன்பர்களே! இந்த ஆண்டு மனதில் உத்வேகம் உருவாகி உயர்வான செயல்களைச் செய்வீர்கள். முன்வைத்த காலை பின் வைக்க மாட்டீர்கள். நீங்கள் யாரையாவது நம்பிவிட்டால் வாரிவழங்கி விடுவீர்கள். எடுத்த முடிவில் இருந்து சிறிதும் இறங்கி வர மாட்டீர்கள்.

## மனதில் உத்வேகம் உருவாகி உயர்வான செயல்களைச் செய்வீர்கள்

**குடும்பம்:** கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். மூத்த சகோதரர் வழிசார்ந்த உறவினர்களால் அனுகூலமான பலன்கள் உருவாகும் . இதனால் மனம் மகிழ்ச்சி கொள்ளும். சமூக காரியங்களில் தலையிட்டு திறம்பட பணியாற்றி நற்பெயர் பெறுவீர்கள். அரசு சார்ந்த மற்றும் தனியார் வங்கிகளின் உதவிகளைப் பெற்று வீடுகளை வசதிக் கேற்ப மாறுதல் செய்வீர்கள். திருமணம் ஆனவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். பிள்ளைகள் உங்கள் எண்ணத்திற்கேற்ப நடந்து கொண்டு நற்பெயரை காப்பாற்றுவார்கள். வீடு கள் வாங்கவும் அதனை அழகுபடுத்தவும் நல்வாய்ப்புகள் உண்டாகும். வாழ்க்கைத் துணையின் மூலம் நற்பலன்கள் தர உள்ளதால் அவரது பெயரில் புதிய சொத்து வாங்கும் யோகம் உள்ளது. குடும்ப ஒற்றுமை மேன்மையடையும். தந்தை வழி உறவினர்கள் தகுந்த உதவிகள் தருவார்கள். குலதெய்வ அருள் தகுந்த சமயத்தில் நல்வழி காட்டும். புகைப்பிடிப்பது, மது போன்ற பழக்கங்களை விட்டு விடுவது நல்லது.

**ஆரோக்கியம்:** உடல்நலத்தில் பாதிப்பு வர வாய்ப்பு இருப்பதால், அதற்கு தகுந்த பயிற்சி முறைகளும் மருத்துவ சிகிச்சை முறைகளும் பின்பற்றி ஆரோக்கிய வாழ்வு பெறலாம். விஷப் பிராணிகளிடம் விலகி இருத்தல் நலம். உடல் நலத்தில் தகுந்த கவனம் வேண்டும்.

**பொருளாதாரம்:** குடும்ப அங்கத்தினர்கள் உங்களுக்கு சிறந்த ஒத்துழைப்பு தருவார்கள். ஓய்வுக்கு கூட நேரமின்றி உழைப்பே பிரதானமாக செயற்படுவீர்கள். பணப் பிரச்சினை தீரும்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களிடம் இருந்து வந்த மனஸ்தாபங்கள் குறையும். உங்கள் செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும். இதனால் நற்பெயர் பெறுவீர்கள். மேலிடத்தின் மூலம் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உங்களுக்கான அங்கீகாரம் உங்கள் எண்ணத்திற்கும் செயலுக்கும் புதிய உத்வேகம் தரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் உண்டு. புதிய பதவிகளும் பொறுப்புகளும் உங்களைத் தேடி வரும். கடுமையாக உழைத்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். முடங்கிய செயல்களை மீண்டும் செய்ய முனைவீர்கள். முட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். அயல்நாடு சம்பந்தமான செயல்களிலும் ஈடுபடுவீர்கள். ஷேர் வகைகளின் மூலம் நல்ல ஆதாயத்தைக் காண்பீர்கள். மனதை ஒருமுகப்படுத்தும் யோகா, பிராணாயாமம் போன்றவற்றை கற்பீர்கள். நிலுவையில் இருந்த பணம் உங்களுக்கு திரும்பக் கிடைக்கும். கடன் சுமைகள் நீங்கி நிம்மதியான வாழ்க்கை உண்டாகும்.

**வியாபாரிகள்:** வியாபாரிகள் தொழிலதிபர்களுக்கு தகுந்த இலாபங்கள் கிடைக்கும். தங்கும் விடுதிகள், சுற்றுலா பஸ்கள், சுற்றுலா கைடுகள் ஆகிய தொழில் செய்பவர்கள் சிறப்பான வளர்ச்சி காண்பார்கள். தொழிலை அபிவிருத்தி செய்ய தேவையான நிதி உதவிகளை வங்கிகளில் தாராளமாக பெறுவார்கள். விருதுகளும் பாராட்டுகளும் கிடைக்கப் பெறுவார்கள். உணவுப்பொருள் உற்பத்தி செய்பவர்கள் புதிய ஓடர்கள் பெற்று தொழில் வளர்ச்சி காண்பார்கள். நவரத்தின கற்கள், தங்கம், வெள்ளி விற்பவர்களுக்கு பொன்னான காலமிது. மிகப்பெரிய வைத்தியசாலைகளை நடத்துபவர்கள் வசதிகளை ஏற்படுத்தி கூடுதல் வருமானம் பெறுவார்கள். விவசாயப் பொருட்களை குத்தகை முறையில் வியாபாரம் செய்பவர்கள் அதிக இலாபம் பெறுவார்கள். கட்டுமான பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் சனியின் அருளால் வளம் பெறுவார்கள். தொழிலில் ஏற்பட்ட நிலுவைக் கடன்களை அடைப்பீர்கள். உங்கள் நிறுவனத்திற்கு புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**பெண்கள்:** குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு கடந்த காலங்களில் இருந்து வந்த பொருளாதார தடங்கல்கள் விலகும். செழிப்பான பணப்புழக்கம் ஏற்படும். அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிவர்கள் தங்கள் பணிகளில் திறமையாக நிர்வாகம் செய்து உயரதிகாரிகளிடம் நற்பெயரும் பதவி உயர்வும் பெறுவார்கள். இனிமையாக பேசுதலும் சமூகத்தில் புகழ்பெறும் வாய்ப்புகளும் நிறைய உண்டு. வீட்டை அலங்கரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**அரசியல்வாதிகள்:** சேவை செய்வதில் இருந்து வந்த மந்தமான நிலை மாறும். ஆன்மீக எண்ணங்களும் நாத்திக செயற்பாடுகளும் சமநிலையாகஇருக்கும். கோயில்களுக்கான திருப்பணிகளில் நிறைவான பொருளாதார பங்களிப்பை உறவினர் மற்றும் நண்பர்களிடம் நன்கொடை பெற்று தன் பங்கையும் இணைத்து திருப்பணிக்கு வழங்குவார்கள்.

**கலைஞர்கள்:** கலைஞர்கள் தங்கள் திறமையை நன்கு பயன்படுத்தி ரசிகர்களிடம் புகழ் பெறுவார்கள். பொருளாதார வகையிலும் நிறைந்த முன்னேற்றம் பெறுவார்கள். தொழிலில் புதிய சாதனைகளை நிகழ்த்தி நற்பெயரும், பரிசும், பதக்கமும் பெறுவார்கள்.




**மாணவர்கள்:** முதல்தர மாணவராக தேர்ச்சி பெறுவார்கள். சக மாணவர்களின் பாடம் தொடர்பான சந்தேகங்களுக்கு உதவும் வழியில் செயற்படுவீர்கள். தேவையான செலவுகளுக்கு பொருளாதாரம் கிடைக்கும். நற்பெயர் பெறுவீர்கள். கல்விக்கு உதவும் வகையிலான சுற்றுலாக்களில் பங்கு பெறுவீர்கள். பேச்சில் இனிமையை சேர்த்துக் கொள்ளுங்கள். உடல் நலத்தில் தகுந்த கவனம் செலுத்துவதால் மட்டுமே ஆரோக்கியம் பெற முடியும்.

**மகம்:** இந்த ஆண்டு குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன்மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிகொடுப்பீர்கள். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. வெளியூர் பயணங்கள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். கவலை வேண்டாம். கடன் விவகாரங்களில் யோசித்து செயற்படுவது நல்லது. கடித போக்குவரத்து மூலம் நல்ல தகவல் வரும். வீண் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். சுபகாரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனதிற்கு பிடித்த காரியங்கள் நடக்கும். அனைவரிடமும் சந்தோஷமாகப் பழகுவீர்கள். மன நிம்மதி உண்டாகும்.

**பூரம்:** இந்த ஆண்டு சாதகமான முன்னேற்றம் ஏற்படப் போவது உறுதி. நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி கொள்ள வேண்டும். வியாபாரிகளுக்கு நெடுநாட்களாக இருந்து வந்த கடன்கள் தீரும். கூட்டு வியாபாரத்தில் கணிசமான இலாபம் கிடைக்கும். வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்வோருக்கு புதிய ஓடர்கள் வந்து சேரும். புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தொழிற்சாலைகள் வைத்திருப்போருக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பொதுவான விடயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள். வியாபார போட்டிகள் சாதகமான முடிவினைத் தேடித் தரும். கவலை வேண்டாம்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த ஆண்டு உங்களின் புத்தி சாதுரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீர்வதற்கு கவனம் செலுத்துவீர்கள். அடுத்தவர்களால் ஏற்படும் கெடுதல்கள் நீங்கும். மனதில் அமைதி பிறக்கும். உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரிடையாகச் செய்யுங்கள். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். தனலாபம் உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**பரிகாரம்:** முடிந்த வரை வெள்ளிக்கிழமைதோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும் ;
**அதிஷ்டகிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி ;
**அதிஷ்ட எண்கள்:** 1, 3, 6

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்குள் புகுந்த சீன வைரஸ் தொற்று

(டில்லி)

சீனாவில் சுவாச நோய்களின் அதிகரிப்புக்குக் காரணமாக கூறப்படும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் தொற்று இந்தியாவில் நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி பெங்களூரில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில், எட்டு மாத ஆண் குழந்தையின் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதாக கர்நாடக மாநில சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாநில சுகாதாரத் துறை சுயாதீனமாக தொற்று அறிக்கையை சரிபார்க்கவில்லை என்றாலும், தனியார் வைத்தியசாலையில் கண்டுபிடிப்புகளின் நம்பகத்தன்மையை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

அண்மைய நாட்களில் சீனாவில் உள்ள வைத்தியசாலைகளில் HMPV உட்பட சுவாச நோய்களின் அதிகரிப்பு அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது.

2001 ஆம் ஆண்டில் நெதர்லாந்தின் ஆராய்ச்சியாளர்களால் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட HMPV, கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க காரணம் என்று அமெரிக்க நுரையீரல் சங்கம் தெரிவித்துள்ளது.

இருமல் அல்லது தும்மலில் இருந்து வரும் சுவாசத் துளிகள் மூலமாகவோ அல்லது கதவு கைப்பிடிகள் அல்லது பொம்மைகள் போன்ற அசுத்தமான மேற்பரப்புகளைத் தொடுவதன் மூலமாகவோ, பாதிக்கப்பட்ட நபர்களுடனான நெருங்கிய தொடர்பு மூலம் வைரஸ் முதன்மையாக பரவுவதாகவும் கூறப்படுகிறது. (நி)


லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(2917)


இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானம் முன்னாள் பிரதி முதல்வர் து.ஈசனால் மீள் புனரமைப்பு செய்து மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இதற்கான ஐந்து இலட்சம் ரூபாய் நிதியினை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து வழங்கி வைத்தார்.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 25 . 02 . 1949



அம்பாள் அடியில் 03 . 01 . 2025

### திரு.சின்னத்துரை ஜெகநாதன்
### (முன்னாள் சிறைக்காவல் அதிகாரி)

யாழ்.நயினாதீவு இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெகநாதன் அவர்கள் கடந்த (03-01-2025) வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.R சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதிகளின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான A.K சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகாம்பிகை (Register of Marriage) அவர்களின் ஆருயிர்க் கணவரும், காந்திமலர் அவர்களின் பாசமிகு சகோதரரும், ஜெசிதா,ஜெசிந்தா, ஜெய்சுரேஷ், ஜெனிதா காலஞ்சென்ற ஜெய்கணேஷ் மற்றும் ஜெய்ரமேஷ், ஜீவிதா, ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரசூரியர், மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மோகனாம்பிகை, மகேஸ்வரி, தணிகாசலம், திவாகரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், செல்வரெத்தினம் மற்றும் சிவரஞ்சினி ஆகியோரின் சகலனும்,காலஞ்சென்ற மணிவண்ணன், மற்றும் சுரேஸ்குமார், சிவறஞ்ஜனி, பிரதீபன், குல்ஜித், பாலமுகுந்தன் ஆகியோரின் அருமை மாமானாரும்,ஜனனி, ஜனனன், அபிலாஸ், அஸ்வின், ஜெய்வின், ஜெவீனா, ஜெனிஷா, ஜெகன், ஜீவன், ஜெலீனா, ஜெலியா, ஜெய்லீ, பானுயா, ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் (07.01.2025) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்னாரின் இரங்கல் நிகழ்வு 07.01.2025 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நயினாதீவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர் (சி-1966)

கனகாம்பிகை (மனைவி) - +1647 9225 094
சுரேஷ் (மகன்) - +141 6616 4046
செந்தில்குமரன் (மருமகன்) - 077 196 8573

## இராசிபலன்

07.01.2025
மார்கழி 23, செவ்வாய்க்கிழமை
அட்டமி பிற்பகல் 4.49 மணிவரை

ரேவதி முன்னிரவு 6.21 மணிவரை
சுபநேரம் 11.02-12.32 மணிவரை
இராகுகாலம் 3.32-5.02 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம் வழி பாட்டில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** உற்சாகத்தோடு செயற்படும் நாள், உள்ளம் மகிழும் சம்பவம் ஒன்று நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் உற்சாகம் காட்டு வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மன நிறைவு கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.


**கன்னி** கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


**தனுசு** மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**மீனம்** மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

தாயும் தந்தையும் செல்லாத பாதையில் நீ செல்லாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட நான்காம் வருட மாணவர்களின் 'முழுமதி அரங்கு நிகழ்வு' நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றபோது...

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் மற்றும் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஜெனரல் 2025 ஆம் ஆண்டிற்கான வணிக நடவடிக்கைகளை ஜனவரி 1 ஆம் திகதி ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தலைமை அலுவலகத்தில் அனைத்து மத ஆசீர்வாதங்களுடன் ஆரம்பித்து வைத்தது.





இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தலைவர், நிறுவன மேலாண்மையினர் மற்றும் SLIC இன் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஜெனரலின் பிரதம செயற்பாட்டு அதிகாரி பிரியந்த பெரேரா, இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தன எல் அலுத்கம, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நுசித் குமாரதுங்க மற்றும் பிரதம அதிகாரி தயாரத்ன பெரேரா இலங்கை ஆயுள் காப்புறுதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உலகம் போற்றும் ஆத்மிக அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டு விழா

ஈழத்திருநாடு செய்த மாதவத்தால் 1925ஆம் ஆண்டு ஜனவரி ஏழாம் நாள் தெல்லிப்பழை மண்ணில் உதித்தவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். நிறைந்த கடவுள் பக்தியுடைய அப்பாக்குட்டி தையல்ப்பிள்ளை தம்பதியினருக்கு புத்திரியாகப் பிறந்தவர் அன்னை. சிறுவயதிலேயே ஆத்மிக நாட்டத்துடன் தேவாரா திருவாசகத்தை மனனம் செய்வதில் அக்கறை கொண்டவர்.

தனது ஆரம்பக் கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சி கலாசாலை வாழ்வு வரை முதன்மை மாணவியாகத் திகழ்ந்தவர். இளம் வயதிலேயே பண்டிதர் பரிட்சையிலும் சித்தி பெற்றவர். சைவப்புலவர் பரிட்சையிலும் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்றார். ஐம்பதுகளில் மேடைப்பேச்சில் அறிமுகமாகி சமயப் பிரசங்கம் செய்வதில் வல்லவரானார்.

மட்டக்களப்பிலுள்ள சென்ற்சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும், கொழும்பிலுள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் ஆசிரியர் பணியாற்றி 1958 இல் நடைபெற்ற கலவரத்தின் பின் அளவெட்டி சதானந்தப் பாடசாலையிலும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றி ஆத்மிகப் பணிக்காக அறுபது வயதிற்கு முன்பே ஓய்வுபெற்றார். பெண்கள் மேடைக்கு ஏறுவதில் அஞ்சிய காலத்தில் ஆன்மிக மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் தனது ஆற்றலை மேம்படுத்திப் பெரும்புகழைப் பெற்றவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தனது சொல்வன்மையால் பலரது மனங்களை ஈர்த்தவர்.

1965 இல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையில் இணைந்து 2008 ஆம் ஆண்டு வரை மிக அர்ப்பணிப்போடு தேவஸ்தான வளர்ச்சியில் செயற்பட்டவர். தேவஸ்தான தனாதிகாரியாகவும் பின் தலைவராகவும் ஒப்பற்ற பணியாற்றியவர். சிறிய கோயிலாக விளங்கிய ஆலயத்தை தேசம் போற்றும் கோவிலாக மாற்றிய பெருமை அவரையே சாரும். அறச்சிந்தனை நிறைந்த அம்மையார் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை அறச்சாலையாக மாற்றினார். 1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை தோற்றுவித்து ஆதரவற்ற பெண்பிள்ளைகளை அரவணைத்து அவர்கள் வாழ்விற்காக அயராது உழைத்தார்.

அம்மையாரின் உயர்ந்த தொண்டால் தேவஸ்தானப் பணிகள் விரிவடைந்தன. நல்லூரில் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தினை அமைத்து நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கும் அடியவர்களின் பசிபோக்கும் அன்னதானப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையை மனதில் நிறுத்தி பல மறுமலர்ச்சித் திட்டங்களை எம் மண்ணில் ஏற்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும். போரினால் இடம்பெயர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்த பல ஆயிரம் அகதிகளுக்கு அன்னம் பாலித்து ஆதரவு வழங்கியவர் அம்மையார். ஆலயத்தில் திருமுறைமடம் அமைத்து பன்னிரு திருமுறைகளை சைவமக்கள் பாதுகாக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டார்.

பல மேடைகளில் அறக்கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறி சமூகத்தை விழிப்படையச் செய்தார். கோயில்களில் நடைபெறும் மிருக பலியை எதிர்த்தார். கோயில்களில் பெண்கள் பஞ்சபுராணம் பாடவேண்டும், கூட்டுப்பிரார்த்தனை செய்ய வேண்டும், தொண்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனக் குரல் கொடுத்தார். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பெண்கள் தொண்டர் சபையை அமைத்தார்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களை ஆற்றுப்படுத்தினார். சமயத்தொண்டு, இலக்கியத் தொண்டு ஆற்றிய சான்றோர்களை விருது கொடுத்து கௌரவித்தார். அம்மையாரின் தூய பணிகளை என்றும் மறக்க முடியாது.

என்னைப் போன்ற ஆன்மிகப் பேச்சாளர்களை ஊக்குவித்தார். 1993 இல் தனது பிறந்தநாள் அறநிதியச் சபையை அமைத்தார். 1995இல் வயதில் குறைந்த என்னை தேவஸ்தான நிர்வாக சபையில் சேர்த்து மதிப்புத் தந்தார். சுமார் பதின்நான்கு ஆண்டுகள் அம்மையாரின் தலைமையில் தேவஸ்தான நிர்வாக சபையில் இணைச் செயலாளராக பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றேன். அம்மையாரிடம் யான் கற்றவை ஏராளம். இன்று அம்மையாரின் பொறுப்புக்களை யான் தலைமையேற்று நடத்துவதற்கு அவரிடம் பெற்ற உன்னதப் பயிற்சியே காரணம் எனலாம். சிறியேனை மிக அன்பாக ஆற்றுப்படுத்திய தாய் எனது வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றார். 2008 ஆம் ஆண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பையும் துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைமைப் பொறுப்பையும் ஏற்ற யான் துர்க்கையம்மனின் நல்லருளாளும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் ஆசியாளும் அவர்பணி தொடர வாய்ப்புக் கிட்டியது.

அம்மையார் இறைபதம் அடைந்த பின் அம்மையாருக்கு ஒரு உருவச் சிலை தேவஸ்தானத்தில் நிறுவப்பட்டது. அது மட்டுமன்றி அம்மையாரின் அஸ்தியை பேழையில் கொண்டு வந்து ஆலய மேற்கு திசையில் நினைவாலயத்தினை நிறுவி வழிபாடு செய்து வருகின்றோம். ஆண்டு தோறும் அம்மையாரின் பிறந்த நாளில் அறக்கொடை விழாவும் அம்மையார் இறைபதம் அடைந்த நாளில் குருபூசையும் எமது தேவஸ்தானம் செய்து வருகின்றது. அம்மையாரின் பெயரால் ஆண்டு தோறும் ஏழை மாணவர்களுக்கான கல்வி நிதியம், வைத்தியசாலைகளுக்கான உதவிப் பணம் தொடர்ந்து வழங்கி வருகின்றது.



ஈழத்திருநாடு செய்த புண்ணியத்தால் இத்தகைய ஒரு புனிதப்பிறவி எம்மண்ணில் பிறந்து மாபெரும் சாதனைகளைச் செய்து தனது எண்பத்தி மூன்றாவது வயதில் விண்ணகம் நோக்கிச் சென்று விட்டார். இவரைப்போன்ற அரிய மனிதர்களைத் தேடுவது என்பது இன்று கடினமாகி விட்டது. அர்பணிப்பு மிக்க அறம் காத்த தாயை மறக்க முடியாது. அன்னார் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடையும் வேளை இவரை நீளநினைந்து வழிபாடு செய்வதே எம்கடனாகும். அன்னையே உம்மை இனி எப்பிறப்பில் காண்போம் அம்மா!!!

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**
**தலைவர்,**
**சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University of Jaffna

Department of Computer Science | Centre for Open and Distance Learning

## கணினிப் புலத்தில் கற்கை நெறிகள் - 2025

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானத் துறையால், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தினூடாக வழங்கப்பட்டுவரும் கணினிப்புலம் சார் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன:

**Building Blocks of Internet of Things**
- 10 Saturdays (9:00 - 12:00)
- Course Fee LKR 15,000.00

**Python for Problem Solving**
- 10 Saturdays (13:00 - 16:00)
- Course Fee LKR 13,000.00

**Responsive Web Development**
- 10 Sundays (9:00 - 12:00)
- Course Fee LKR 13,000.00

**Advanced Web Development**
- 10 Sundays (13:00 - 16:00)
- Course Fee LKR 13,000.00

- க.பொ.த, உயர்தரப் பரீட்சை எழுதிய பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் கணினித்துறையில் ஆர்வமுள்ள அனைவருக்குமானது.
- முற்றிலும் செயன்முறைகளினூடான, தமிழ் மொழி மூல வகுப்புகள், நேரடி அமர்வுகளாக நடைபெறும்.
- தர்க்க மற்றும் கணிதப் புதிர்கள் உள்ளடங்கிய தகுதிகாண் தெரிவுப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

| விண்ணப்ப முடிவுத்திகதி | தெரிவுப் பரீட்சை | கற்கைநெறிகள் ஆரம்பம் |
|---|---|---|
| 11/01/2025 | 18/01/2025 | 01/02/2025 |

விண்ணப்பங்கள், "www.csc.jfn.ac.lk/expr/application-process" எனும் இணையப் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினூடாக மட்டுமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை, விண்ணப்பக் கட்டணம் ரூ. 500.00 க்கான வங்கிப்பற்றுச்சீட்டின் மென்பிரதியை இணைத்துச் சமர்ப்பிக்கவும். கட்டணங்கள் அனைத்தும், வழமையான வைப்புச் சீட்டைப் பயன்படுத்தி, மக்கள் வங்கியின் கிளையொன்றினூடாக மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:
www.csc.jfn.ac.lk/expr/tamil-version/
021 221 8194

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
07.01.2025

(C-1965)

# மணிவிழா வாழ்த்து



## திரு. குமாரசாமி கேதீஸ்வரன்
ஆசிரியர் (B.A Dip in Education)

அகிலத்தில் நாம் உயர
அச்சாணியாக இருந்து
ஆரம்பக் கல்விதனை
ஆணித்தரமாய் கற்பித்த
கனிவான எங்கள்
கேதீஸ்வரன் ஆசானே
களிப்புடன் வாழ்த்துகிறோம்
அகவை அறுபதில்

மாணவர் வளர்ச்சிக்கு
மகத்தான பணியாற்றிய
மணிவிழா நாயகனே
மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்
மண்ணில் என்றும்
வளமுடன் வாழ வாழ்த்தும்
கற்றுயர்ந்த மாணவர்கள்.

**சேவை விபரம்**

கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம்
12.09.2005– 22.03.2007

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
23.03.2007 – 22.05.2007

யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை
23.05.2007 – 09.01.2010

கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம்
10.01.2010 – 10.03.2012

யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க பாடசாலை
11.03.2012 இன்றுவரை

வாழ்த்துவோர் :
பழைய மாணவர்கள்
சி.சுபாஸ், ச.செந்தூரன், கெ.சசி

(2938)

# யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...

5TH EDITION

**11th & 12th January 2025**
9.00 am to 5.00 pm
VALAMPURI HOTEL JAFFNA



- வெற்றிகரமாக ஐந்தாவது ஆண்டாகவும் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய உயர் கல்விக் கண்காட்சி
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்திக்கலாம்
- A/L 2024 உயர்தர பரீட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்.
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- இலவச புலமைப்பரிசில்கள்
- உடனடி அனுமதிகளுக்கு சிறப்பு தள்ளுபடிகள் என இன்னும் பல சலுகைகள்.

**அனுமதி இலவசம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

விபரங்களுக்கு அழையுங்கள்
0756244170
0775656633


PLATINUM SPONSOR: A·P·I·I·T Inspire love for learning | StudyGlobal by APIIT
GOLD SPONSOR: BCAS CAMPUS | NORTHERN UNI | NEW ZEALAND FUTURE CENTRE | ESOFT METRO CAMPUS
SILVER SPONSOR: CA | SCOT | ICS
OFFICIAL RADIO PARTNER | PRINT MEDIA PARTNER வலம்புரி | SUPPORTED BY | ORGANIZED BY EVOLUTION | DIGITAL MEDIA PARTNER SAKSITV

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# விண்ணிலிருந்து விழுந்த 500 கிலோ உலோகம்



(நைரோபி)

கென்யாவில் ராட்சத வட்ட வடிவிலான 500 கிலோ எடையிலான உலோகம் வானில் இருந்து விழுந்தது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. இது விண்வெளிக் குப்பை என அந்நாட்டு விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவின் முக்குகு என்ற பகுதியில் சமீபத்தில் வான்பரப்பில் இருந்து ராட்சத வட்ட வடிவிலான உலோகம் விழுந்தது.

இதைப் பார்த்து அப்பகுதி மக்கள் கடும் அச்சம் அடைந்தனர். உடனே, தகவலறிந்து வந்த அந்நாட்டின் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ராட்சத உலோகத்தை ஆய்வுக்கு உட்படுத்தினர்.

அந்த உலோகம் 8 அடி விட்டம், 500 கிலோ எடையில் இருந்தது. அது ரொக்கெட்டிலிருந்து பிரிந்த ஒரு பகுதி என்றும் விண்வெளியில் சுழன்று கொண்டிருந்த அந்தக் குப்பை பூமியில் விழுந்ததாகவும் கென்யா விண்வெளி மையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், "பூமியில் இருந்து அனுப்பப்படும் ரொக்கெட்டின் நிலைகளை இணைக்க பிரிப்பு வளையங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

"விண்வெளிக்கு ரொக்கெட் செலுத்தியபின் குறிப்பிட்ட தொலைவுக்கு பின், அது தானாக எரிந்து அழிந்து விடும் அல்லது ஆழ்கடலில் அதன் எச்சங்கள் விழுவது போல் வடிவமைக்கப்படும். ஆனால் ஒரு சில வளையங்கள் மட்டும் மக்கள் வசிக்கும் பகுதியில் விழும் நிலை ஏற்படுகிறது.

"வானில் இருந்து அதீத வேகத்தில் வந்ததால் சிவப்பு நிறத்தில் மிகவும் வெப்பம் நிறைந்ததாக காணப்பட்டது. அதன் வெப்பம் குறைந்ததும் உரிய நிறத்தில் காட்சியளித்தது. இதுபோன்ற விண்வெளிக்குப்பை நிலப்பகுதியில் பலமுறை விழுந்துள்ளன.

இதனால் மக்கள் அச்சப்பட தேவையில்லை. இதற்குக் காரணமான நிறுவனத்தை கண்டறிந்த பின் சர்வதேச சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# 13 ஆ…

# மோசமா…

# எதிர்கொள்…

- 30 மாகாணங்களில் அவ…
- 1500 விமானங்கள் ரத்து



(வோஷி…
அமெரி…
கடுமையா…
2011ஆம்…
மற்றும்…
அமெரிக்…
பட்டுள்ள…
மற்றும் ப…
விக்கப்பட்…

வீதிகளின் நிலைமைகள் ஏற்கனவே மோசமடைந்துள்ளன. பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக சில விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன.

மிசிசிப்பி மற்றும் புளோரிடா போன்ற கடுமையான குளிரை இதுவரை எதிர்கொள்ளாத அமெரிக்காவின் சில பகுதிகளில் கூட வானிலை மோசமாகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் கிழக்கு…

நோ…
இன்…
வெப்…
கர்க…
என்…
விப்ப…
அ…

# 20 நிமிடங்களில் 5000 ரொக்கெட்டுகள்

## கோரமுகத்தைக் காட்டிய இஸ்ரேல்

(ஜெருசலேம்)

காசா மீது இஸ்ரேல் கடந்த மூன்று நாட்களில் மேற்கொண்ட தாக்குதலில் 200 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே போர் மூண்டிருக்கும் நிலையில், பாலஸ்தீனத்திலிருக்கும் ஹமாஸ் இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.



அந்தத் தாக்குதலில் இஸ்ரேலில் இதுவரை 42 பேர் பலியாகியுள்ளதாகவும் 500 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பாலஸ்தீனத்தின் தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தியதில் கிட்டத்தட்ட 200 பாலஸ்தீனியர்கள் பலியாகிய துடன், குறித்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தில் செயற்படும் ஹமாஸ் ஆயுதக்குழுக்கள் கடந்த சனிக்கிழமை ரொக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர்.

முதல் தாக்குதல் நடத்திய 20 நிமிடங்களில் 5 ஆயிரம் ரொக்கெட்டுகளை வீசியதாக ஹமாஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ந)

# ஹிலாரி கிளி…
# அமெரிக்கா…

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பதவி காலம் வருகிற 20 ஆம் திகதி முடிகிறது. அன்று தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் புதிய ஜனாதிபதியாக பதவி



யேற்…
இ…
வின்…
தான…
விரு…
ஜோ…
அ…
வெ…
ஹில…
டாள…
னண…
ஜென…
லிமே…
வடிவ…
முன்…
ளர் ப…
உ…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஆண்டுகளில் இல்லாத ...ான பனிப்புயலை ...ள்ளும் அமெரிக்கா!

## ...அவசர நிலை பிரகடனம் ...து



(...வாஷிங்டன்)

**...மெரிக்கா கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஒரு ...மையான பனிப்புயலை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது. ...1ஆம் ஆண்டுக்கு பிறகு மிக மோசமான பனிப்பொழிவு ...றும் குளிரான வெப்பநிலை நிலவக்கூடும் என்பதால் ...மரிக்காவின் 30 மாகாணங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப் ...ள்ளது. கென்டக்கி, விர்ஜீனியா, கான்சஸ், ஆர்கன்சாஸ் ...றும் மிசோரி ஆகிய மாகாணங்களில் அவசர நிலை அறி ...கப்பட்டுள்ளது.**

நோக்கி நகரும்போது இன்னும் மிகக்குறைந்த வெப்பநிலையை அமெரிக்கர்கள் எதிர்கொள்வார்கள் என்று வானிலை முன்னறிவிப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஆர்க்டிக் பகுதியைச் சுற்றி வரும் குளிர்ந்த காற்றின் ஒரு பகுதியான துருவச் சுழல் காரணமாக இந்தத் தீவிர வானிலை ஏற்படுவதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் சராசரி வெப்பநிலை -1 செல்ஸியஸாக இருந்தது. அந்த ஆண்டிற்குப் பிறகு இந்த வருடம் தான் மிகவும் குளிரான ஒரு ஜனவரி மாதத்தை அமெரிக்கா எதிர்கொள்ளவிருக்கிறது.


2011 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் பல பனிப்புயல்கள் வடகிழக்கு அமெரிக்காவைத் தாக்கின. இதனால் நியூயோர்க் நகரம் போன்ற பகுதிகளில் வரலாறு காணாத பனிப்பொழிவு இருந்தது.

பனிப்புயல் காரணமாக அமெரிக்கன் ஏர்லைன்ஸ், 46 விமான நிலையங்களுக்குப் பயண எச்சரிக்கைகளை வெளியிட்டுள்ளது.

கண்காணிப்பு வலைத்தளமான ஃப்ளைட்அவேர் படி 2,000 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகியுள்ளன. அமெரிக்காவிற்கு உள்ளே வரக்கூடிய மற்றும் வெளியே செல்லக் கூடிய 1,500 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கான்சஸ் நகர சர்வதேச விமான நிலையம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது, அங்கிருந்து புறப்படக் கூடிய 86% விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. (நி)

# ...ளிண்டன், மெஸ்சிக்கு ...காவின் உயரிய விருது



...யேற்கிறார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் உயரிய குடிமகன் விருதான ஜனாதிபதி சுதந்திரப் பதக்க விருதுக்கு 19 பேரை ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், முதலீட்டாளர் ஜார்ஜ் சொரோஸ், முன்னணி கால்பந்து வீரரான அர்ஜென்டினாவை சேர்ந்த லியோனல் மெஸ்சி, ஆடை வடிவமைப்பாளர் ரால்ப் லாரன், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மறைந்த ஆஷ்டன் கார்ட்டர் உட்பட 19 பேர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.



அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த விழாவில் விருதுகளை ஜோ பைடன் வழங்கினார். விருது பெற்ற ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட் முதல் பெண்மணி ஆவார்.

கால்பந்து வீரர் மெஸ்சி, போட்டிகள் மற்றும் வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றதால் இந்த விருது விழாவில் கலந்து கொள்ளவில்லை. (நி)

# பதவி விலகுகின்றார் ஜஸ்டின் ட்ரூடோ?



(ஒட்டாவா)

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது இராஜினாமாவை விரைவில் அறிவிப்பார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் இது குறித்து இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை. எனினும் இது குறித்து தீவிரமாக சிந்திக்கின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ளன.

ஒன்பது வருடகாலம் பிரதமராகப் பதவி வகித்துள்ள நிலையில் கனடாவின் ஆளும் லிபரல் கட்சியின் தலைமை பதவியிலிருந்து விலகுவது குறித்த அறிவிப்பை அவர் இன்று வெளியிடுவார் எனக் குளோப் அன்ட் மெயில் தெரிவித்துள்ளது.

ஒக்டோபரில் கனடாவில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகினால் அது லிபரல் கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கருத்துக் கணிப்புகள் லிபரல் கட்சி மோசமான தோல்வியை சந்திக்கும் எனத் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

கருத்துக்கணிப்புகள் லிபரல் கட்சி தோல்வியடையும் எனத் தெரிவிக்கின்ற சூழ்நிலையில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிரதமர் பதவி விலகவேண்டும் என வேண்டுகோள் விடுத்துவருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் - பகுதி – I



06

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தொடக்க காலத்தில் கொழும்பை மையப்படுத்தியதாக நடைமுறையிலிருந்த உள்ளூராட்சித் திணைக்களம் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பின் உள்ளூராட்சி விடயப்பரப்பு மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்படி நாட்டிலுள்ள சகல 9 மாகாணங்களுக்கும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், உள்ளூராட்சி ஆணையாளர்கள் 09 பேரும்; உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

மாகாண மட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களமும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கு சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் 1989 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபை சம்பந்தமான மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சருக்கு உள்ளது. இப்பொறுப்பு பெரும்பாலும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு கிடைக்கின்றது.

### உள்ளூராட்சி நிர்வாகம் நடைபெறுகின்ற சட்டபூர்வ மொழி

கருத்துரைத்தலும் நிர்வாகமும் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலமாகவே இடம்பெறுகின்றது. (அரசியல் அமைப்பு 19, 20 மற்றும் 22). வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் தமிழ் மொழியிலாகும். ஏதேனுமொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சனத்தொகை விகிதாசாரத்தின்படி வேறு மொழியைப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுக்கலாம்.

உள்ளூராட்சி மன்றங்களின் சட்டங்கள், துணை விதிகள், ஆவணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் மாதிரிப் படிவங்கள் அதன் நடவடிக்கைகள் அவ் உள்ளூராட்சி சபையின் நிர்வாக மொழியிலேயே மேற்கொள்ளப்படும்.

### உள்ளூராட்சி சபையின் சமூகப் பொறுப்புகள்

உள்ளூராட்சி நிறுவனத்தின் நகர முதல்வர்/ தலைவர் தமது அதிகாரப் பிரதேசத்தின் பிரதான பிரஜையாவார். அதற்கேற்ப, பிரதேசத்தின் மக்கள் மத மற்றும் கலாசார விழாக்களில் பிரதம அதிதியாக செயலாற்ற வேண்டியேற்படும். அவ்வாறே தமது உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நட்புரீதியான தொடர்புடன் செயலாற்றுவதும் உள்ளூராட்சி மன்ற நிறைவேற்றுப் பிரதானிகளின் பொறுப்பாகும்.

### உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பொறுப்புக்கள்

1. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கடமைகள், அதிகாரங்கள், வளங்கள் மற்றும் கூட்டமைப்பு தொடர்பாக பூரண விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல்.

2. 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க சட்டத்தினுடைய கட்டளைகள், 1988 ஆம் ஆண்டு நிதியியல் மற்றும் நிர்வாக ஏற்பாடு, கூட்டங்களை நடாத்துவது தொடர்பான செயற்பாடு, உப விதிகள் மற்றும் சட்டத்துடன் தொடர்புப்பட்ட ஏனைய சட்டத்திட்டங்கள் தொடர்பாக அறிந் திருத்தல் மற்றும் சபை தீர்மானங்களை மேற்கொள்ளும் போது விளக்கத்துடன் கதைத்தல் மற்றும் செயற்படல்.

3. பிரதேச சபைக்கு உரிய அலுவல்கள், அதிகாரங்கள், வளங்கள் மற்றும் கட்டமைப்பு தொடர்பாக பூரண விளக்கத்துடன் செயற்படல்.

4. நிறுவனத்தினுடைய வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தினை வரைய உதவி செய்தல். தேவையான ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்குதல்.

5. வரைந்த திட்டத்திற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஒத்துழைப்பு தருதல்.

6. வருடாந்த வரவு செலவு திட்ட ஆவணத்தினை வரைய ஒத்துழைப்பு வழங்குதல். தேவையான விதந்துரைகளையும், விபரங்களையும் வழங்குதல். மேலும் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதிலும், நடைமுறைப்படுத்துதலிலும் வழிகாட்டுதல்.

7. நிறுவனத்தினுடைய அலுவல்களை முன்னெடுத்து செல்வதில் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதில் ஒத்துழைப்பு வழங்குதல்.

8. மக்கள் நலன் கருதி எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

9. விடயங்களை பயனுள்ளதாகவும் திறன்மிக்கதாகவும் முன்னெடுத்துச் செல்ல தேவையான வழிகாட்டுதலினை பெற்றுத்தரல்.

10. சபையின் வருமானவழிகளை மேம்படுத்த வழிகாட்டுதல்.

11. பிரதேசத்தில் உள்ள மக்கள் தேவைக்கேற்ப, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏற்ப உபவிதிகளை வழங்குதலிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

12. மக்கள் தேவைக்கேற்ப வசதிகளினையும் சேவைகளினையும் வழங்குவதற்கு வழிகாட்டுதல்.

13. சபையினுடைய நிதி, நிர்வாகத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைத்தல்.

14. சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் நிலையான சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் அவற்றை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துமாறு சபையின் அவதானத்திற்கு கொண்டு வருதல்.

15. சபையின் நிதியினால் அல்லது வேறு நிதியத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற தொழிற்சாலை மற்றும் சேவைகளை கண்காணித்தல் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக ஏதாவது இருப்பின் சபைக்கு அறியப்படுத்துதல்.

16. சபையினால் அல்லது ஊழியர் குழாமினால் செய்யப்படுகின்ற தவறுகள் மற்றும் வஞ்சகம், ஊழல் தொடர்பாக சபைக்கு அறிவித்தல் மற்றும் அவற்றினை தடுப்பதற்குத் தேவையான உபாயங்களை சபைக்கு முன்வைத்தல்.

17. உள்ளூராட்சி நிறுவனங்களினால் ஆட்சி பிரதேசத்திற்குள் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களினை பிரதேச மக்களுக்கு தெரியப்படுத்துதல், இணைத்தல், மற்றும் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

18. உள்ளூராட்சி நிறுவனங்களாவன மக்களுக்காக இருக்கின்ற நிறுவனங்கள் என மக்கள் நினைக்கும் அளவிற்கு மிகவும் வெளிப்படையாக அலுவல்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

### உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் முறைகளில் ஏற்பட்ட மாற்றம்

இலங்கையில் பெரும்பான்மை (தொகுதிவாரி) முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகிய மூன்று முறைமைகளும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரீட்சிக்கப்பட்டுவிட்டன.

1947 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் இருந்த தொகுதி வாரி தேர்தல் முறையானது "வாக்காளருக்கு இலகுவான (Voter Friendly) தொகுதிக்கு ஒரு உறுப்பினரை தெரிவு செய்து கொள்ளும் இலகுவான வழிமுறையாக அமைந்தது. எனினும் அதன் பிரதான குறைபாடாக அமைந்தது என்னவெனில் செல்லுபடியான எல்லா வாக்குகளுக்குமான பிரதிநிதித்துவத்தை அது உறுதி செய்யவில்லை. தோல்வியடைந்த வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குகளுக்கு எந்தப்பெறுமதியும் இருக்கவில்லை.

1978ஆம் ஆண்டில் ஜே.ஆர் ஜெயவர்தன அறிமுகப்படுத்திய விகிதாசார தேர்தல் முறையானது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை அறிமுகத்தோடு உருவானது. எனவே விகிதாசார முறையின் பிரதான குறைபாடானது உறுதியற்ற அரசாங்கம் உருவாவதுடன் உறுப்பினர்களின் தெரிவு ஒரு பிரச்சினையானது. வேட்பாளர்கள் அசாதாரணமாக தேர்தல் செலவுகளை மேற்கொள்ள இந்த முறை இடமளித்தது.

இவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தே 2003 ஆம் ஆண்டு தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமித்தது. மிக நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் 2007 ஆம் ஆண்டு குறித்த தெரிவுக்குழு இடைக்கால அறிக்கையை வெளியிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிளிநொச்சி மாவட்டத்தில்

# வாழ்வாதாரத்தை காப்பாற்ற முடியாமல்

# திண்டாடும் விவசாயிகள்!

(தருமபுரம்)

**வெள்ளத்தாலும் நோய்த்தாக்கத்தாலும் தொடர் அழிவுகளை சந்திப்பதால் வாழ்வாதாரத்தை காப்பாற்ற முடியாத நிலையில் நெற்செய்கையை கைவிடத் தீர்மானித்துள்ளதாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 70000 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வெள்ள அனர்த்தத்தினால் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்போது கபில நிறத்தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம் அதிகரித்த நிலையில் நெல் பூரணமாக முதிர்வடையாத நிலையில் அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

எஞ்சி இருக்கின்ற நெல்லையாவது காப்பாற்றும் நோக்குடன் தாம் அறுவடை ஆரம்பித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த போகங்களிலும் நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் குறைவடைந்த நிலையில் இம்முறையும் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த கால போகத்திலும் ஒரு ஏக்கருக்கு 5-8 மூடைகளே . அறுவடை செய்ய முடிந்ததாகவும் தெரிவித்ததுடன் மேலும் இந்நிலை தொடருமாயின் நெற்செய்கையிலிருந்து எமது வாழ்வாதாரத்தை காப்பாற்ற முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக நெற் செய்கையில் இருந்து விலக வேண்டிய நிலை ஏற்படக் கூடும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-8-316)



## அரிசிவிலை, பதுக்கல் தொடர்பில் வடமாகாணத்தில் 774 சுற்றிவளைப்புக்கள்

### பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

(வவுனியா)

அரிசி விலை, பதுக்கல் தொடர்பில் வட மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.



அரிசி விற்பனை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி கடந்த 2024 ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பாக வட மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா மாவட்டத்தில் அரிசி விலை தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் வட மாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

## சொற்போர் விவாதப் போட்டி இறுதிப் போட்டியில் இலங்கை அணி

(தருமபுரம்)

மலேசியாவில் இடம்பெறும் சொற்போர் விவாதப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மலேசியாவில் உள்ள திரங்கானு பல்கலைக்கழகம் நடத்தும் அனைத்துலக வானரங்க சொற்போர் போட்டியில் இலங்கை சார்பாகப் பங்குபற்றிய அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இவ் விவாதப் போட்டிக்கு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைகழக மாணவர்களை கொண்ட அணி அறிவியல் தமிழ் அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

முதல் மூன்று சுற்றுக்களிலும் இந்தியா, சிங்கப்பூர், மலேசிய அணிகளுடன் போட்டியிட்டு தற்போது இறுதிச் சுற்றுக்கு தெரி வாகியுள்ளது. இறுதி சுற்று இந்தியாவுடன் இடம்பெறவுள்ளன. (8-316)

## திருவாசக முற்றோதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஜெயந்தி நகர், மகாதேவ ஆச்சிரமத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் வீதியில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நற்சிந்தனைப் பாடல்கள் இடம் பெற்றுத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு "புராணபடன மகிமை" எனும் தலைப்பில் ஓய்வுநிலைத் திட்டப் பணிப்பாளர் சைவப்புலவர் சு.தேவமனோகரன் உரையாற்றவுள்ளார். (8)



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்தவிஜயபால மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. தூய இலங்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் பொலிஸாரின் நலன்புரி விடயங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (படம்: தேவானந்தன்)



கிளிநொச்சி புன்னைநீராவி அ.த.க. பாடசாலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட 29.75 மில்லியன் ரூபா நிதி உதவியில் அமைக்கப்பட்ட கட்டடம், வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (படம்: தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 676





ரவிதாஸன் முதலியவர்கள் பின்னர் மறு வார்த்தை பேசாமல் அந்தச் சிறுவனையும் அழைத்துக் கொண்டு அவசரமாக அப்பால் போனார்கள். நந்தினி வந்தியத் தேவனை இலேசான தீவர்த்தி வெளிச்சத்தில் ஊடுருவிப் பார்த்து "ஐயா! உமக்கும் எனக்கும் ஏதோ ஒரு துவந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது" என்றாள்.

"அம்மணி! அந்தத் துவந்தம் மிகப் பொல்லாததாயிருக்கிறது. மிகக் கெட்டியாகவும் இருக்கிறது. என் உடம்பையும் கைகளையும் சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.

உம்முடைய விளையாட்டுப் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள். வேண்டுமென்று இங்கு வந்தீரா! தற்செயலாக வந்தீரா?

வேண்டுமென்று வரவில்லை! தற்செயலாகவும் வரவில்லை. தங்களுடைய ஆட்கள்தான் பலவந்தமாக என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். இல்லாவிடில் இத்தனை நேரம் கொள்ளிடக்கரையை அடைந்திருப்பேன்.

என்னைப் பார்க்கும்படி நேர்ந்ததில் உமக்கு அவ்வளவு கஷ்டம் என்று தெரிகிறது. என்னைப் பிரிந்து போவதற்கு அவ்வளவு ஆவல் என்றும் தெரிகிறது.

தங்களைப் பார்க்க நேர்ந்ததில் எனக்குக் கஷ்டம் இல்லை தவிர தங்களைப் பிரிந்து போவதற்குத்தான் உண்மையில் வருத்தமாயிருக்கிறது. தாங்கள் மட்டும் அனுமதி கொடுங்கள் ஒரு பக்கத்தில் அந்தக் கிழட்டுப் பழுவேட்டரையரிடமும் இன்னொரு பக்கத்தில் இந்தப் பயங்கர மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டு தாங்கள் திண்டாடுகிறீர்கள். ஒரு வார்த்தை சொல்லுங்கள். இவர்களிடமிருந்தெல்லாம் தங்களை விடுதலை செய்து அழைத்துப் போகிறேன்." எங்கே அழைத்துப் போவீர்கள்?

இலங்கைத் தீவின் காடுகளின் அநாதையைப் போல் அலைந்து கொண்டிருக்கும் தங்கள் அன்னையிடம் அழைத்துப் போய் விடுகிறேன் என்றான் வந்தியத்தேவன். நந்தினி ஏமாற்றம் தொனிக்க ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

"நானும் அப்படி அநாதையாக அலைய வேண்டும் என்று விரும்புகிறீரா? ஒரு வேளை அத்தகைய காலம் வந்தாலும் வரலாம். அப்போது அன்னையிடம் அழைத்துப் போக உம்முடைய உதவியை அவசியம் நாடுவேன். அதற்கு முன்னால் என்னுடைய எண்ணம் நிறைவேற வேண்டும். அது நிறைவேறுவதற்கு உதவி செய்வீரா?" என்று கேட்டாள்.

அம்மணி! தங்கள் மனதிற்கொண்ட எண்ணம் என்னவென்று தெரிந்தால் அதற்கு உதவி செய்வதைப் பற்றி நான் சொல்ல முடியும்? என்றான் வந்தியத்தேவன்.

உண்மையான பிரியம் உள்ளவர்கள் இப்படிச் சொல்லமாட்டார்கள். எண்ணம் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளாமலே அதை நிறைவேற்றுவதற்கு உதவி செய்ய முன் வருவார்கள்."

பிரியமுள்ளவர்கள் சமயத்தில் எச்சரிக்கை செய்து ஆபத்திலிருந்து காப்பாற்ற முயல்வார்கள் அம்மணி. தங்களை இந்தக் கிராதகர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து பெரிய அபாயத்தில் சிக்க வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய காரியத்துக்கு உங்களை உபயோகப்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

நீர் கூறுவது தவறு! நான்தான் இவர்களை என்னுடைய காரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறேன்!

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## கறையும் இருளும்



இரவு நேரம். நாரையொன்று காற்றில் பறந்து சென்று கொண்டிருந்தது. எங்கும் பட்டப் பகல் போல் ஒளி பரவியிருந்தது. அந்த ஒளியில் வெப்பம் இல்லை. குளிர்ச்சி நிறைந்த அந்த இன்ப ஒளி எங்கிருந்து வருகிறது என்று தேடித்தான் அந்த நாரை பறந்து கொண்டிருந்தது.

உலகமெங்கும் அந்த இன்ப ஒளி பரவியிருந்தது. நாரை சென்ற இடமெல்லாம் அந்த ஒளிநிறைந் திருந்தது. நாரை சிந்தனையோடு வானை நோக்கி நிமிர்ந்தது. உயரத்தில் ஒளித்தகடு போல் வட்ட நிலா அழகுடன் விளங்கியது.

நாரை அதன் அழகில் மயங்கி நிலாவையே பார்த்துக் கொண்டு நின்றது.

நிலா அழகாகத்தான் இருந்தது. உலகம் முழுவதும் ஒளி பரப்பும் பேரொளியைப் பெற்றுத்தான் விளங்கியது. ஆனால் அந்த ஒளி நிலாவின் இடையிலே ஓர் இருட்டுப் பகுதியும் இருந்தது. அது நிலவின் இடையில் ஒரு கறை போல இருந்தது.

இவ்வளவு அழகான நிலவின் இடையில் இப்படி ஒரு கறையிருக்கிறதே என்று வருந்தியது.

நாரை தன்னிடம் உள்ள கறையை நீக்கிக் கொள்ளாமல் உலகைச் சூழ்ந்துள்ள இருளை ஓட்டப் புறப்பட்டு விட்டதே இந்த நிலவு! இதன் கருத்து என்ன என்று அறிய நாரை ஆசைப்பட்டது.

அது நிலாவை நோக்கிப் பறந்தது. எவ்வளவு உயரம் பறந்தும் அதனால் நிலாவை அடைய முடியவில்லை போகப் போக நிலா மேலும் மேலும் தொலைவில் தான் இருந்து கொண்டிருந்தது.

நிலாவை நெருங்க முடியாது என்று கண்டு கொண்ட நாரை அருகில் காற்றில் தவழ்ந்து சென்று கொண்டிருந்த ஒரு மேகத்தைப் பார்த்தது. மேகமே நிலா தன்னிடமுள்ள கறையைப் போக்கிக் கொள்ளாமல் உலகில் உள்ள இருளைப் போக்குகிறதே! இதன் கருத்து என்ன என்று கேட்டது.

நாரையே, உயர்ந்த பெரியோர்கள் தங் கள் குறையைக் காட்டிலும் பிறருடைய குறையை நீக்குவதே முதற் கடமை என்று நினைப்பார்கள். அது போன்றதுதான் நிலாவின் இயல்பு ! என்றது மேகம். நிலாவின் உயர்ந்த தன்மையை வியந்து பாராட்டிக் கொண்டே நாரை உலகு நோக்கி இறங்கி வந்தது.

கருத்துரை :- தன் துன்பத்தைக் காட்டிலும் பிறர் துன்பத்தைப் பெரிதாக நினைத்து அதைப் போக்க உதவி செய்வதே நல்லோர் இயல்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் வாழும் வரை சிவத்தமிழ்ச் செல்வி ஆன்மீக உலகுக்கு ஆற்றிய திருப்பணியும் அவரின் திருநாமமும் என்றும் வாழும்.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழ்மண் தந்த சிவத்தமிழ் அன்னை

எங்கள் ஈழத் திருநாடு சிவபூமி எனப் போற்றப்பட்ட புண்ணிய பூமி.

சித்தர்களும் சிவஞானயோகிகளும் வாழ்ந்த ஞானபூமி இது.

எத்துணை துன்பங்கள் வந்துற்றபோதிலும் படைக்கலமாக உன் நாமத்து ஐந்தெழுத்தும் எங்களைக் காப்பாற்றும் என்ற மனத்திடத்துடன் வாழ்கின்ற மக்களைக் கொண்ட திருமண் இது.

காலந்தோறும் ஞானிகளும் யோகிகளும் தோன்றி அறத்தையும் இறை வழிபாட்டையும் நிலைக்க வைத்த எங்கள் சிவபூமி, சைவத்தமிழ் உலகுக்குத் தந்த பெருங்கொடை சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் என்றால் அஃது சாலப் பொருத்துடையது.

இன்று சிவத்தமிழ் அன்னையின் நூற்றாண்டு பிறந்தநாள்.

இந்நாளில், சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆற்றிய சமய சமூகப் பணிகளை நம் இளஞ்சந்ததிக்கு எடுத்துரைப்பது எங்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமை.

அதிலும் குறிப்பாகப் பாடசாலை மாணவர்களுக்கு சிவத்தமிழ் அன்னையின் அறப்பணியை – ஆளுமையை எடுத்துக்கூறுவது மிகவும் அவசியமானது.

ஆம், சிவத்தமிழ் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என வாழ்ந்த பெருந்தகை.

ஆலயங்கள் அறப்பணிகளைச் செய்ய வேண்டும் என்பதை நிரூபித்தவர்.

ஆன்மீக சொற்பொழிவுகள் மூலம் ஆன்மீக தானத்தை மக்களுக்கு வாரி வழங்கியவர்.

அவரின் கணீர் என்ற குரல் தருகின்ற மெய்ஞானத் தத்துவங்கள் இன்னமும் எங்கள் மண்ணில் இறைபணியாக – அறப்பணியாக – சமய சமூகப் பணியாக செழுமையுற்று நிற்கிறது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மூலம் அவர் வித்திட்ட அறப்பணிகள் இன்று வியாபகம் பெற்றிருப்பதற்குள் அவரிடம் இருந்த ஆளுமையும் முகாமைத்துவத் திறனும் எத்துணை உயர்வானதென்பது வெளிப்பட்டு நிற்கிறது.

ஆம், தனக்குப் பின்னும் தனது பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்த அன்னை அவர்கள், தான் முன்னெடுத்த அறப்பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கும் பொறுப்பை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களிடம் ஒப்படைத்தார்.

தனது பொறுப்புக்களை அவர் உரியவாறு ஒப்படைத்ததன் காரணமாக அவரின் புண்ணிய ஆன்மா நினைத்ததுபோல, இன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் தெய்வீகச் சுவர்க்கலோகமாகக் காட்சி தருகிறது.

கூடவே அவர் முன்னெடுத்த அறப்பணிகள் இன்னும் பல்கிப் பெருகி விருட்சமாகி நிழல் தருகின்றன.

இஃது அடுத்த சந்ததியிடம் கையளிக்கின்ற அவசியத்தையும் அதில் சிவத்தமிழ் அன்னை பெற்ற பெரு வெற்றியையும் எமக்கு எடுத்தியம்புகிறது.

ஆக, எங்கள் ஈழத் திருநாடு பெற்ற மங்கையர் திலகம் சிவத்தமிழ் அன்னையின் நூற்றாண்டில் அவர் ஆற்றிய பணிகளைப் புகழ்ந்தும் போற்றியும் பரவுவோம். அவர் திருவடி பணிந்து வணங்குவோம்.

# எந்தவொரு அதிகார அரசியல் நகர்விலும் பங்காளியாகச் செயற்படமாட்டேன்

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

நாட்டு மக்களின் நலனை இலக்காகக் கொண்டு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் தற்போது மிகுந்த அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு அப்பால் தாம் எந்தவொரு அதிகார அரசியல் செயற்பாடுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்கப் போவதில்லை என அவ்வியக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய தேசியக்கட்சியையும் ஒன்றிணைப்பதற்கான மத்தியஸ்தத்தை வகிக்குமாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரவிருப்பதாக, சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்துத் தெளிவுபடுத்தும் வகையில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே கரு ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, "நான் எந்தவொரு அரசியல் தரப்பினதும் பங்காளியாகவோ அல்லது ஆதரவாளராகவோ செயற்படமாட்டேன்" எனச் சுட்டிக்காட்டியுள்ள கரு ஜயசூரிய, "நாட்டின் மீது அதீத மரியாதையும், பற்றும் கொண்ட பிரஜை என்ற ரீதியில் நாட்டுமக்களின் நலனை முன்னிறுத்தி எனது இனிவருங்கால வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்துச் செயலாற்றுவேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவு முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் விஜித ஹேரத்

வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவுக் கட்டளையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இலத்திரனியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்களுக்குத் தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் 7 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான கடவுச்சீட்டுக்கு மேலதிகமாகப் புதிய கடவுச்சீட்டுக்கள்வழங்கப்பட வேண்டும்.

கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டதையடுத்து இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாகக் கடந்த அரசாங்கம் முன்னர் மேற்கொண்ட தவறான தீர்மானமே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம்.

கடவுச்சீட்டுக்கான முன்பதிவுகளை மேற்கொண்டு சிலர் ஐந்து முதல் ஆறு மாதங்களாகக் காத்திருக்கின்றனர்.

இதன் காரணமாகக் கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான பொறுப்பைப் புதிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

# ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லேரிகம பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (05) அத்துருகிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரியப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெடிகமுவப் பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 06 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-7)

# நுவரெலியாவில் கருக்கலைப்பு மாத்திரை விற்றவர் கைது

(நுவரெலியா)

நுவரெலியாவில் கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்த மருந்தகத்தின் உரிமையாளர் நுவரெலியாப் பிரிவு ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரியினால் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

சட்ட விரோதக் கருக்கலைப்பு மாத்திரையை 15 ஆயிரம் ரூபாய்க்கு மருந்தக உரிமையாளர் விற்பனை செய்வதாகப் பிரதேச ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இலஞ்ச ஒழிப்புப் பிரிவின் நிலைய அதிகாரி மேனன் தெரிவித்தார்.

நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரியுடன் இணைந்து உத்தியைப் பயன்படுத்தி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மருந்தகத்தில் விற்பனைக்காக ஏராளமான கருக்கலைப்பு மாத்திரைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியில் விபத்து

## இளைஞன் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியில் சிறாம்பியடிப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை (06) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன்ஒருவன்ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் புத்தளம் கருவலகஸ்வெவப் பகுதியைச் சேர்ந்தவராவார்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது நிலைமை கவலைக்கிடமாகக் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# மின்கட்டணத் திருத்தம் யாழில் ஆலோசனைக் கூட்டம்


மின்சாரக் கட்டணத்திருத்த முன்மொழிவு தொடர்பான வடக்கு மாகாணப் பொது மக்களின் ஆலோசனைகளைக் கேட்கும் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டம் நேற்றுக் காலை 08.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை மின்சார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், உதவி நிர்வாகப் பணிப்பாளர் மற்றும் துறைசார் அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நடைபெற்ற குறித்த பொது மக்கள் ஆலோசனை கேட்கும் கூட்டத்தில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், துறைசார் வல்லுனர்கள், பொது மக்கள் எனப் பலரும் கருத்துக்களை முன்வைத்துருந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வ மதத் தலைவர்களை சந்தித்து ஆசி பெற்ற சபாநாயகர்



(கொழும்பு)

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன கடந்த சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்பு மிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபட்டு ஆசிகளைப் பெற்றுக் கொண்டார். இந்த வழிபாட்டில் தியவடன நிலமே நிலங்க தேல பண்டாரவும் இணைந்துகொண்டார்.


அதனைத் தொடர்ந்து மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற சாபாநாயகர் மல்வத்து பீட மகா நாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் சபாநாயகர் கண்டி ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சபாநாயகர் தெவட்டகஹ பள்ளிவாசலுக்குச் சென்று மதத் தலைவர்களைச் சந்தித்ததுடன், கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் சந்தித்து ஆசி பெற்றார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 250-300 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 1100 | 900-1100 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350 | 480 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 150-200 | 200 |
| கோவா | 180 | 250 | 250 | 220 | 300 |
| கரட் | 200 | 300 | 250 | 300 | 400 |
| பூசணி | 140 | 140 | 160 | 150 | 200 |
| புடோல் | 250 | 200 | 250 | 250 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 120-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 280 | 220 | 200 | 250 |
| பாகற்காய் | 700 | 200 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 160 | 400 | 300 | 250-300 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 350 | 150 | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 400 | 600-800 | 600 |
| லீக்ஸ் | 420 | 380 | 300 | 330 | 400 |
| பீற்றூட் | 450 | 450 | 550 | 400 | 600 |
| கறிமிளகாய் | 900 | 700 | 700 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 400 | 350 | 400 | 500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 80 | 150 | 80-100 | 200 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 200-270 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 170 | 100-180 | 180-220 |
| இராசவள்ளி | 500 | 800 | 650 | 700 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 700 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 250 | 140 | 200 | 200-250 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 80 | 200 |



# மானிடத்தை நேசித்த உத்தமர் கோன்
# நயினை ஜெகநாதன்

**கனடா நாட்டில் இயற்கை எய்திய அவருக்கு இதயம் நெகிழ்ந்த அஞ்சலி**

ஆறடி உயரம், காத்திரமான உடல், சிரித்த முகம். அந்த அற்புதமான மனிதனை 2013 ஆம் ஆண்டு நயினாதீவில் சந்தித்தேன். மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணியின் பொருட்டு நானும் ஆலய பரிபால சபையின் செயலாளர்சகோதரன் ப.திருவருட்செல்வனுமாக அவரின் வீட்டுக்குச் சென்றிருந்தோம். முன்பின் அறிமுகம் இருந்திருக்கவில்லை. எனினும் தீவக மண்ணுக்கு உரித்தான பண்புடைமையின் உன்னதத்தோடு அவர் எங்களை வரவேற்றார்.

அவரின் இல்லத்தரசியின் பணிவும் பக்குவமும் தெய்வீகப் பொலிவும் கண்டு வியந்தோம். ஆலயப் புனரமைப்புக்காக உதவிகேட்டுச் சென்றவர்களுக்கு இப்படி ஒரு வரவேற்பு எங்கு இருக்க முடியும்.

ஆம். நயினாதீவு ஜெகநாதன் அவர்கள், நாம் சந்தித்த வியப்பு மிகுந்த மனிதர். 50 ஆயிரம் ரூபாய் உதவி செய்வாராக இருந்தால், அது பெருங்கொடை என்று நினைத்தோம். அதற்காகவே அவரைச் சந்தித்தோம். ஆனால் அவர் இரண்டு இலட்சம் ரூபாயை எங்கள் கைகளில் தந்த போது அதிசயிக்காமல் எப்படி இருக்க முடியும்.

அறிமுகமில்லாத அந்தச் சந்திப்பு ஓர் உன்னதமான மனிதரின் நட்பும் அன்பும் எமக்குக் கிடைக்க வழிவகுத்தது. பின்னாளில் மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவனாலயத்திற்கு ஜெகநாதன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் வந்து சென்றார்.

அவர் வருகின்ற ஒவ்வொரு முறையும் ஆலயப் புனரமைப்புக்காகப் பல இலட்சங்களை வழங்கி தில்லேஸ்வரப் பெருமானின் திருத்தலம் குடமுழுக்கு காணவும் செழுமை பெறவும் பேருதவி புரிந்தார்.

ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தின் போது **சிவனருட் செல்வர்** எனும் கௌரவத்தை ஆலய பரிபாலனசபை அவருக்கு வழங்கி மகிழ்வு கண்டது. இன்று அந்த உன்னதமான மனிதர் எம்முடன் இல்லை என்பதை நினைக்கும் போது கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்கின்றன.

ஆம் சிவனருட்செல்வர் ஜெகநாதன் அவர்கள் கனடா நாட்டில் இயற்கை எய்தினார் என்ற செய்தி இதயத்தைப் பிழிகிறது.

இல்லாதவர்களுக்கு ஈந்து அளிக்கின்ற கொடை உள்ளம். தன் உழைப்பை சிவப்பணிக்காக அர்ப்பணம் செய்கின்ற ஆத்ம ஞானம். ஆலயங்களில் மேள, நாதஸ்வர இசை ஒலிக்க வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வம் என அவரின் உயர்ந்த மானிடம் கண்டு வியந்தவர்களில் நானும் ஒருவன்.

உண்மை. நயினாதீவு ஜெகநாதன் அவர்கள் இல்லாதவர்களுக்கு வாரி வழங்கிய பாரி. மற்றவர்களை மதிக்கின்ற மாசற்ற மனம் கொண்ட நெஞ்சினன்.

நயினாதீவு இரட்டங்காலி முருகன் மீது அவர் கொண்டிருந்த பக்தி எத்துணை உயர்வானதென்பதை அந்த ஆலயத்தில் அவர் மேற்கொண்ட பணிகள் காலம் காலமாகப் பேசும்.

சிவனருட்செல்வர் ஜெகநாதன் அவர்களின் அறப்பணிகளுக்கு அவருடைய மனைவியும் மக்களும் ஆற்றிய உதவி அவர் பெற்ற பெரும்பேறு எனலாம்.

தந்தையின் அறப்பணிக்கு உதவுவதே தங்கள் பணி என்று வாழ்கின்ற நன்மக்களும் நன் மனைமாட்சியும் என எல்லாச் சிறப்புகளுடன் வாழ்வாங்கு வாழ்ந்த எங்கள் மரியாதைக்குரிய சிவனருட்செல்வர் ஜெகநாதன் அவர்களின் ஆத்மா ஆருத்திரா தரிசனம் காணுகின்ற மார்கழித் திங்களில் தேக வியோகம் அடைந்துள்ளது.

மானிடத்தை நேசித்த உத்தமர் கோன் ஜெகநாதன் அவர்களின் இறுதிக் கிரியை இன்று கனடா நாட்டில் நடைபெறுகின்ற இந்த நேரத்தில் அவருடைய புனிதமான ஆத்மா எல்லாம் வல்ல தில்லேஸ்வரப் பெருமானின் திருவடிகளில் நித்திய பேரின்பம் அடைய அவன் தாள்பணிகின்றோம்.

**என்.விஜயசுந்தரம்**
**தில்லேஸ்வரம் சிவனாலயம்,**
**மண்டைதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக்காய்ச்...

நோய்க் காரணி Leptospirosis பக்றீரியா தாக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

எனவே மக்கள் காய்ச்சல் ஏற்பட்டால் மற்றும் தசைநோ, கண்சிவத்தல், சுவாசப்பிரச்சினைகள் போன்றவை காணப்பட்டாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இதைவிட தற்போதைய பனியுடனான காலநிலையில் சளி அதிகரித்து நிமோனியா போன்ற காய்ச்சலும் ஏற்பட வாய்ப்புண்டு. அதனைவிட மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளமையால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

## நீண்ட...

கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்பு உள்ளதாகச் சந்தேகிக்கப்படும், வடமராட்சி - குடத்தனை, மாளிகைத்திடல் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரே நேற்று முன்தினம் மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனியார் கம்பெனி ஒன்றின் சொத்துக்கள், ஆவணங்கள், தொலைபேசி மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிய சம்பவத்தின் சந்தேகத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாகப் பொலிஸார் வலை வீசி வந்த நிலையில் குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு அதிரடியாக மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யச் சென்ற பொலிஸாரைத் தாக்கியதுடன் தப்பி ஓடமுயன்றதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குறித்த நபரை மருதங்கேணிப் பொலிஸார் தடுத்துவைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரணில் - சஜித்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் பௌத்த மதத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் பல தரப்பட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (ம-7)

## நிறுத்தப்பட்ட...

டுள்ளது.

இதன்படி முன்னுரிமை அடிப்படையில் உரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இதுவரை வசதியான வீட்டு உரிமையில்லாத கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் 65,000 பேர் கொழும்பு நகர எல்லையில் வசிப்பதாகக் கூறப்படுகின்ற நிலையில் சம்பந்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்கி வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அதற்காக மக்கள் தொகை மற்றும் வீட்டுமனை கணக்கெடுப்புத் தரவுகளை அடிப்படையாகக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழில் மீண்டும்...

நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்ற பின்னர் இங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன.

எனினும், அந்தச் சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாற்றம் என்று கூறிப் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசு சோதனைச் சாவடிகளைத் தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைப்பதுமான இந்த நடவடிக்கை தொடர்பில் பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-7)

## மக்களின்...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் சட்டமா அதிபர் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

நீதித்துறைக் கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும், அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும், மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் இடமளிக்கக்கூடாது எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இங்கு மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும், சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

இதில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-7)

## இந்...

வான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் தற்போது சீனாவில் புதிய வைரஸ் ஒன்று பரவி வருகிறது.

எச்.எம்.பி.வி என அழைக்கப்படும் இந்த வைரஸால் பலர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில்,

முதல் மனித மெட்டா நியூமோ வைரஸ் தொற்று பாதிப்பு இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளது.

பெங்களூருவைச் சேர்ந்த 3 மாதப் பெண் குழந்தை மற்றும் 8 மாத ஆண் குழந்தை உட்பட 5 குழந்தைகளுக்கு எச்.எம்.பி.வி தொற்றுப் பாதிப்பு இருப்பதாக சுகாதாரத் துறை உறுதி செய்துள்ளது.

குழந்தைகள் தீவிர கண்காணிப்பில் உள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில், குழந்தையின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றைப் போன்றே இந்த வைரஸால் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மேலும், சீனாவின் வடக்கு மாகாணங்களில் வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ளதோடு, இதில் சிறுவர்கள் பலர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக உலக நாடுகள் பலவும் அச்சத்தில் உள்ளன. (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

மஹஜன சம்பத
திகதி 2025.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 5708
G 2 2 1 3 7 2
அத சம்பத
G 1 3 7 2
சீட்டிழுப்பு இலக்கம் 283
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1738
E 01 18 56 63 E
Double Chance 94424

மெகா பவர்
திகதி 06/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2056
T 03 05 25 28 40

லக்கி 7 VIP
திகதி 2025.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 534
R 5 9 2 4 7 4 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3950
சீட்டிழுப்பு திகதி 06.01.2025
X 01 17 25 63
X

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 1017
விருச்சிகம் 31 47 53 61 விருச்சிகம்
95249 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.01.2025 வெற்றி வாரம் 416
L 2 8 3 1 7 5
53281
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,623,704.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2682
சீட்டிழுப்பு திகதி 2025.01.06 தினம் திங்கட்கிழமை
17 39 57 63 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,318,400.80

சனிதா
திகதி 06.01.2025 வெற்றி வாரம் 4843
14 29 45 58 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,959,673.60
79090

ஜயோதா Jayoda
திகதி 2025.01.06 வெற்றி வாரம் 2092
08 17 37 52 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,174,004.80

சீட்டிழுப்பு வாரம் 4394
சீட்டிழுப்பு திகதி 06.01.2025 தினம் திங்கட்கிழமை
02 10 19 58 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,384,383.20
234025

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 24 11 48 50 66
1858
06.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,006,649.40

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2508
சீட்டிழுப்பு திகதி : 2025.01.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,512,128.80
01 06 08 26 I
769573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்நிதிக் கடன்களில் சிக்கி 200 பெண்கள் பலி

## தேசிய மகளிர் ஒன்றியத் தலைவி

இலங்கையில் கடந்த சில வருடங்களில் நுண்நிதிக் கடன் வலையில் சிக்கிய சுமார் 200 பெண்கள் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளதாகத் தேசிய மகளிர் ஒன்றியத்தின்தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக் கடன் பெறுகின்றனர். அதில் 24 இலட்சம் பேர் பெண்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையிலுள்ள நுண்நிதி நிறுவனங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம்வரை அதிக வட்டிக்குக் கடன் வசதிகளை வழங்குவதாகவும், கடனைச் செலுத்த முடியாத சில பெண்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சில பிரதிநிதிகளினால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதாகவும் ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையினால் குடும்பங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்ந்து, பிள்ளைகள் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளதாகவும், சில பெண்கள் வேலை செய்ய வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேறத் தூண்டப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சிறு நிதிக் கடன் பிரச்சினையால் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் உள்ளனர். அவர்களில் பலர் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் இல்லாமல், பதிவு செய்யப்பட்ட வங்கிகளில் கடன் பெற முடியாமல் நுண்கடன் நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார். (ம-7)

புலம்பெயர்ந்த இலங்கையர்கள்

# தூதரகங்கள் மூலம் ■ ■ ■ சான்றிதழ்பெற நடவடிக்கை

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை தாமதமின்றி அந்தந்த நாடுகளின் தூதரகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் வகையில் டிஜிட்டல் வசதிகள் நேற்று (06) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு அமைய இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 07 தூதரகங்களுக்கு இந்த முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் ஜப்பான், கட்டார், குவைத் தூதரகங்கள், மிலானோ, டொறொன்டோ, மெல்பேர்ன் மற்றும் துபாய் ஆகிய நாடுகளின் துணைத் தூதரகங்கள் ஊடாக அந்த நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை தாமதமின்றி பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அனைத்துத் தூதரகங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி இது தொடர்பான இணையத்தளம் அமைச்சர் விஜித ஹேரத்தால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அந்தந்த நாடுகளின் அந்தந்தத் தூதரகங்களுக்குச் சென்று அது தொடர்பான சேவைகளைத் தாமதமின்றி மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கிளிநொச்சியிலிருந்து மோ. சைக்கிளில் வவுனியாவுக்கு கஞ்சா கடத்தல்

## பெண் உட்பட இருவர் கைது

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்தியதாகப் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருந்து 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதில் பயணித்த 36 வயதுடைய பெண் ஒருவரும், அவரது சகோதரர் எனக் கூறப்படும் 30 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)


**தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள், மேசன் தொழிலாளர்கள், உப ஒப்பந்தகாரர்கள் தேவை**

பிரபல கட்டுமான நிறுவனமான கதிர் இன்ஜினியரிங் கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமான வேலைக்கு தகுதியான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள், மேசன் தொழிலாளர்கள், உப ஒப்பந்தகாரர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு : 077 2417 103 (2947)

**CANADA VISA**

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(C-1968)

Exponet Overseas consultant
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் நான்கு அறைகளைக் கொண்ட வீடு (வாகனத் தரிப்பிட வசதியுடன்) வாடகைக்குண்டு.

வியாபார நிறுவனங்கள், களஞ்சியசாலைகள், உணவகங்களுக்கு பொருத்தமானது. (2941)

077 201 7824

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (2944)

076 825 7716 (ஆகாஸ்)

V2 VISA SERVICES
கனடா Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1969)

**வாகனம் தேவை**

பட்டா (Badi), முச்சக்கர வண்டி (Autto) மாதாந்த வாடகை அடிப்படையில் தேவை. (2942)

தொடர்புகளுக்கு
075 829 3256
077 635 4224


**யோக்கட் கொள்வனவுகள்**

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம். (520)




Happy Supermarket
உரும்பிராய்
+94 76 800 65 00

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




கொழும்பு பண்டாரநாயக்க மண்டபத்தில் இன்று 07.01.2025 செவ்வாய்க்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் எமது பாடசாலை அதிபர்

திரு. S.S.A.R. நிலோச்குமார்
(SLPS-2, B.B.A(Hons), PGDE, DSM, M.Ed)

அவர்கள் LLB பட்டம் பெறுவதனையிட்டு அகமகிழ்வடைகிறோம். இவர் மென்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி நிற்கின்றோம். (2946)

வாழ்த்துவோர்...
ஆசிரியர் கழகம்,
யாழ்/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

**காணி விற்பனைக்குண்டு**

**யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- உடுப்பிட்டி சன்னதி கோயில் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- நல்ல சூழல், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- பொக்கன் சந்திக்கு அருகாமையில் உடுப்பிட்டி வாசிக சாலை சந்தி 300 மீற்றர் தூரம்
- சன்னதி முருகன் கோயில் 2 கிலோமீற்றர் கெருடாவில் கந்தசாமி கோயில் 200 மீற்றர் தூரம்
- வழி இலக்கம் 751 மற்றும் 767 அரச, தனியார் பேருந்து செல்லும் பிரதான காபற் வீதி
- பார்வையிடும் நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

(2940)

தொடர்புகளுக்கு:
070 290 2338, 076 017 1105


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 181, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org